Registerad as a News Paper மக்கங்கள் 05 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 06 (21-11-1992) சனிக்கிழமை ஓசை 277

## அகதிகளுக்கான நிவாரணமாக புகையூட்டிய உணவு

யாழ். மாவட்டத்தில் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கு உலா உணவு நிவாரணமாக வழங்குவதற்கென தனிக்கப்பலில் புகையூட்டிய அரிசியும், மாவும் எடுத்துவரப்படவிருக்கிறது. ''மெரினாஸ்'' என்று அழைக்கப்படும் தனிக்கப்பலில் இப் பழுந்தடைந்த உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது இத் துரித நடவடிக்கை காரணமாக நாளைமறுதினம் இக்கப்பல்பருத்தித்துறை துறைமுகத்தைவந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாளை மறுதினமே பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (3 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் செயலரை சுட முயற்சி; கொழும்பு நீதிமன்றம் மீதும் குண்டுவீச்சு

## தலைநகரில் வன்முறைச் சம்பவங்கள்

[கொழும்பு]

கொழும்பில் நேற்று இரு வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஒன்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் செயலாளரான கே. எச். விஜயதாசாவை கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி எனச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இரண்டாவது கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம் பெற்ற குண்டுவீச்சுச் சம்பவமாகும்.

இவ் இரு சம்பவங்களிலும் ஒரு பொலிஸ் சார்ஜன்ட், ஒரு சட்டத்தரணி, இரு கைதிகள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் செயலாளர் மீது மேற்கொள்ளடபட்ட கொலை முயற்சி அவரது வீடு அமைந்திருக்கும் டொரிங்டன் பிளேசிலுள்ள திபிரிகசாய வீதியில் உள்ள ஜாவத்தையில் இடம்பெற்றது.

இக் கொலை முயற்சிபற்றித் தெரியவருவதாவது ஜாவத்தையிலுள்ள ஜனாதிபதியின் செயலாளர் கே, எச். விஜயதாசாவினதும், வர்த்தக வாணிப அமைச்சர் மன்சூரினதும் வீடுகளுக்கும் இடையில் நேற்றுக்காலை சந்தேகப்படக்கூடிய விதத்தில் இருவர் நடமாடியதாகவும், இது குறித்து பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இருவரையும் பொலிஸார் சோதனையிட முயன்ற போதே இக் கொலை முயற்சி தெரியவந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் அறியவருவதாவது செயலாளரினதும், அமைச்சரினதும் வீட்டிற்கு இடையில் நடமாடியவர்கள் குறித்து தகவல் கிடைத்ததும், ஜனாதிபதியின் செயலாளரின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இவ் இருவரையும் சோதனை போட முயற்சித்ததாகவும் அப்பொழுது இவ் இளைஞர்களில் ஒருவர் பாக்கிலிருந்து எடுத்த ஏ. கே. ரக துப்பாக்கியால் அப் பொலிஸ் சார்ஜனைச் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சூடு (3 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு வீதிகளில் சோதனை நிலையம் அமைப்பு

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளரின் இல்லத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த மெய்ப் பாதுகாவலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து கொழும்பில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டுத் தாக்குதல் குறிதத எச்சரிக்கையின் மத்தியிலும் சிறிலங்கா கடற்படை தளபதி கிளான்சி பெர்னான்டோ கடந்த திங்களன்று கொல்லப்பட்டார். இதனையடுத்து கொழும்பில் கடும் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டமை தெரிந்ததே.

எனினும் மீண்டும் நேற்று கொழுமபில் தாக்குதல் நடாத்தப்பட்டதையிட்டு அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து கொழும்பு நக

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர்கள்; மக்களைக் காக்க எல்லைகளில் விழித்து நின்றவர்கள்

மாவீரர்கள் இவர்கள் மனிதர்களில் மாறுபட்ட சிந்தனையுடன் வாழ்ந்தவர்கள், இம் மண்ணுக்காக மடிவதை மாண்புடன் ஏற்றுக் கொண்டவர்கள், மக்கள் உறங்க அவர்களைக் காக்க எல்லைகளில் விழித்துக்காத்து நின்றவர்கள், கல்வியைத்துறந்து கடமையை மதித்தவர்கள். தம்வாழ்வைத் துச்சமென மதித்து மண்ணை மீட்டு மக்களை வாழவைக்க வேண்டும் என்ற கனவைச் சுமந்தவர்கள், தம் மரணத்தின் பின்பாவது மண்மீட்கப்படும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகம் மாவீரர் வாரத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தலைவரை, தலைமைத்துவத்தை, விசுவாசித்தவர்கள் நேசித்தவர்கள், அசையாத நம்பிக்கை கொண்டவர்கள், கட்டுப்பட்டவர்கள், காலால் செய்யும் வேலையெனினும், மதிப்பின் மிகுதியால் தலையால் சுமந்து நிறைவேற்றிய வர்கள், எதிரியின் பாசறைகளை, அரண்களைத் தகர்த்து நிலைகுலையச் செய்து, அழித்தொழித்து, மீதப்பட்டோரை ஓடோட விரட்டியவர்கள், முகாம்களைத் தகர்த்தெழுந்தவர்கள், அதியுன்னத சக்தி வாய்ந்த ஆயுதங்களை, ரவைகளை, குண்டுகளை, சாதனங்களை, வாகனங்களை எதிரியிடமிருந்து பறித்தெடுத்தவர்கள்.

எங்களைப் பின்பற்றுங்கள் எம்முடன் இணையுங்கள் மண்ணை மீட்கப் போராடுங்கள் என்று வாலிபருக்கும், யுவதிகட்கும், ஏன் மக்களுக்குமே வழிகாட்டி இணைத்து, இணைய மாதிரிகளாகத் திகழ்ந்து மறைந்த மகான்கள் இம் மாவீரர்கள். அடிமை

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம் வடபகுதி எங்கும் எழுச்சிக் கோலம்

[நமது நிருபர்]

பொலிஸார் சோதனையிட கிளான்சி பெர்னான்டோ கட

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பாராளுமன்றம் மீது தாக்குதல் நடக்கலாம்

## சபாநாயகர் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றமும் குண்டுத் தாக்குதலுக்குஇலக்காகலாம். என்று சபாநாயகர் எம் எச் எம். முகம்மது பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் பாராளுமன்றத்தை பாதுகாப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தம்முடைய ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்]

பாராளுமன்றத்திற்கு வழங்கப்படும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், உறுப்பினர்கள் தங்களுடன் பாராளுமன்றத்திற்கு வருபவர்கள் பற்றி நன்றாக விசாரித்து அறிந்து வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு அரசாங்க கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் குண்டு வீசப்பட்டதை நினைவு படுத்திய சபாநாயகர் பாராளுமன்றத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானது

– ஹமீத்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானது என்றும் இதனைத் தெரிவுக் குழு ஆராய்ந்து வருகிறது என்றும் அமைச்சர் ஏ. சீ. எஸ். ஹமீத் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலேயே அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. இதற்கான வழிவகைகளை பாராளுமன்றத் தெரிவுக் குழு ஆராய்நது கொண்டிருக்கிறது. எனவே இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கே இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## புலிகள் ஊடுருவியதாக புத்தளத்தில் வதந்தி

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக பரவிய வதந்தியை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கருவலகஸ்வெவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பன்சல்கஸ் என்னும் கிராமத்திற்குள் புலிகள் ஊடுருவி உள்ளதாக வதந்தி பரவியது.

இதனை அடுத்து அக்கிராமத்தையும் சுற்றுப்பகுதிகளையும் சேர்ந்த சுமார் 1000 குடும்பங்களைச் சேர்ந்த 6200 பேர் இரவோடு இரவாக வெள்யேறினர்,

இதனைத் தொடர்ந்து அங்கு மேலதிக பாதுகாப்பு ஏறபாடுகள் செய்யப்பட்டதாயினும் மக்கள் மீளக் குடியேற அஞ்சுகிறார்கள் என அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன,

## கடற்படை தளபதி கொலை; கொழும்பு இளைஞர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைத் தளபதி கொலை தொடர்பாக நாரகேன்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்று குண்டுத்தாக்குதலில் ஈடுபடடவர் என கருதப்படும் லோகிமோகன் மோட்டார் சைக்கிள் சாரதி லைசென்ஸ் பெறுவதற்கு இவ் இளைஞரின் மோட்டார் சைக்கிளையே உபயோகித்தார் என தெரிவிக்கப்படுகிறது. விக்ரர் ஜோர்ஜ் எனப்படும இவ் இளைஞர் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## கடற்படை நடமாட்டம் அதிகரிப்பு

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற் பகுதியில் கடற்படையினரின் நடமாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

[நமது நிருபர்]

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் தமிழீழ மாவீரர் வாரம் இன்று தமிழீழமெங்கும் எழுச்சிபூர்வமாக ஆரம்பமாகின்றது.

தமிழீழ மண் மீட்புக்காகத் தம் உயிர்களைத் தற்கொடையாக்கிஆகுதியான இ மாவீரர்களை நினைவு கூருமுகமாக இன்று முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

மாவீரர் வாரத்தையொட்டி வீதிகள் தோறும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருப்பதுடன் மஞ்சள், சிவப்புநிற கொடிகள் வீதிகள் தோறும் பறக்க விடப்பட்டுள்ளதுடன் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் பறக்கவிடப் பட்டுள்ளன.

### அலங்காரவளைவுகள்

யாழ். மாவட்டத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட அலங்கார வீதி வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வர்த்தக சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், ஆகியன இவற்றை அமைத்து வருகின்றன.

மாவீரர்களின் தியாகங்களை சித்திரிக்கும் ஓவியங்கள், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், கோட்டையில் புலிக்கொடி, மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் மலர் வைத்து வணங்குதல், புலிகள் எதிரிகளைப்பந்தாடுதல், சிறிலங்கா இராணுவ அட்டூழியங்கள், விமானக் குண்டுவீச்சு அனர்த்தங்கள், கடற்புலிகளின் தாக்குதல்கள் போன்ற பல உயிரோட்டமான ஓவியங்கள் இவ்வளவுகளில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

### வட்டப்பந்தல்கள்:

மாவீரர் வாரத்தில் இது வரை தமிழீழ விடுதலைக்கா

(3 ஆம் பக்கம் பார்க்க)

# விசகடி வைத்தியர் வீடு மீது ஷெல் வீச்சு இருவர் பலி; பலர் படுகாயம்

## பாம்பு தீண்டியவரும் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாயில் மக்கள் குடியிருப்புக்கள் மீது இரவுவேளைமேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று இரவு 10 30 மணியளவில் மூளாய் பிள்ளையார் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் மன்மதன் [வயது 38], பூபாலசிங்கம் [வயது 20] ஆகிய இருவரும் பலியானார்கள் இதில் மன்மதன் என்பவர் பாம்பு தீண்டி விஷகடி வைத்தியர் வீட்டில் சிகிச்சை பெற்று கொண்டிருந்தபோது எறிகணை வீழ்ந்து வெடித்ததில் படுகாயமடைந்து பின்னர் வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் பலியானார். சிவானந்தன் [வயது 19] தவபாலசிங்கம் [வயது 29], கண்ணதாசன் [வயது 18], கந்தசாமி [வயது 56] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த மேற்படி நபர்களை வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் கட்டுடைப் பகுதியில் வாகனம் விபத்திற்குள்ளாகியதால் சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

மேற்படி விபத்தில் சாரதி பாலசிங்கம் [வயது 35] சற்சொரூபன் [வயது 22] பாஸ்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலையில் சிக்கிய குழந்தை ஒப்படைப்பு

(வட மராட்சி)

மூன்று மாதகாலம் தாயைப் பிரிந்து இளவாலை முகாமில் தங்கியிருந்த மூன்று வயதுப் பெண் குழந்தையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாயிடம் ஒப்படைத்தனர்

குழந்தையின் தாய் தேவை ஒன்றுக்காக யாழ்ப்பாணம்வந்திருந்த போது இளவாலையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இளவாலையில் சிக்கிய பேர்த்தியாருடன் இருந்த துரைசிங்கம்-நிர்மலி நிஷாந்தினி என்ற குழந்தையை செஞ்சிலுவைச் சங்கம் மீட்டுவந்து தாயிடம் ஒப்படைத்துள்ளது. (யோ)

## மாவீரர் உருவப்படம் பெற்றுக்கொள்ளலாம்

[யாழ்ப்பாணம்]

தாயகவிடுதலைப் போராட்டத்தில் தியாக மரணமடைந்த மாவீரர்கள் சிலரது உருவப்படங்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறன.

லெப். சங்கர் (செல்வச்சந்திரன், சத்தியநாதன்,) லெப். சீலன்-ஆசீர் (ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி), 2ஆம் லெப். லலித் (நடேசு நாகேந்திரன்), கப்டன் பண்டிதர்-

(4 ஆம் பக்கம் பார்க்க)

**பிறந்தாலும் மாவீரர் போலப்பிற, வாழ்ந்திங்கு இறந்தாலும் அவர் போல இற**

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் வீட்டுடன் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: என். தில்லைவிநாயகம் பிரசித்த நொத்தாரிசு, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். (சி-5430)

நல்ல நிலையில் ஸ்கூட்டர் ஒன்று விற்பனைக்குண்டு. (VESPA P150A) யூனிவேர்சல் வீடியோ, 404 அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (3664)

Robin Ey 14DX மிக நல்ல நிலையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம், இருபாலைச்சந்தி சனி, ஞாயிறு நாட்களில் மட்டுமே பார்வையிடலாம். (சி- 5432)

பன்டேஜ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. ஆதவன் மருந்தகம், கைதடிச் சந்தி. (சி-3222)

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284) ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில் யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி 5399)

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

## பற் சிகிச்சை


பற் சிகிச்சை நிலையம் (எஸ் பி. சாமி அன் கோ. கட்டிடம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தினசரி 12 ந.ப. -2 பி.ப. வரை. (சி-3216)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

நெல்லியடி வர்த்தகர் சங்கத்திறகுட்பட்ட பகுதியில் இரவு பாதுகாப்பு சேவையில் ஈடுபடுவதற்கு உத்தியோகத்தர்கள் தேவை, தகுந்த சம்பளம் நேர்முகப் பரீட்சையில் பேசித் தீர்க்கப்படும்.

23-11-92 திங்கள் பிற்பகல் 3 மணிக்கு வர்த்தகர் சங்கக் காரியாலயத்திற்கு தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் சமூகம் தரவும். (3495)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை செழியன்

சிதம்பரப்பிள்ளை சற்குணராஜா

தாயின் மடியில் 7-8-1974 — தமிழீழ மண்ணில் 21-11-1990

எங்கள் தோட்டத்தில் மலர்ந்த முல்லை-தன்
இதழ்களை இழந்து ஈராண்டு ஓடியதோ?
தங்கமண் காக்கச்சென்ற - எங்கள் குயில்
தன்சிற கிழந்து ஈராண்டு போனதுவோ?

கத்துங் கடல் முத்து காணாமல் போனதுவோ?
நித்தமிம் மண்ணில் நின்றொளிர்ந்த வான்நிலவு
செத்தழிந்து ஈராண்டு சென்று மறைந்ததுவோ?
முத்தமிழின் வீணை கம்பியினை அறுத்ததுவோ?

எங்கள் இளந்தளிர் எமைவிட்டுப் போனதுவோ?
பொங்கும் நதியொன்று பொலிவிழந்து வற்றியதோ?
திங்கள் என நின்ற எங்களொளி மங்கியதோ?
சிங்கத்தைக் கொன்று சிறுத்தையது வீழ்ந்ததுவோ?

உன் ஆத்மா சாந்தி உற
எங்களின் பிரார்த்தனைகள்

உன் பிரிவால் வாடும்
பெற்றோரும், சகோதரிகளும்

25, கமால் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

[3670]

# நினைவு கூருகின்றோம் ...

## 1992-11-21

1984ஆம் ஆண்டு இதே தினத்தில், கிளிநொச்சியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது காணாமற் போன 2- தமிழ்ப் பொறியியலாளர்கள்.

1986-ம் ஆண்டுமட்டு - கல்லடிப்பகுதியில், சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

**நிலான்** (ரூபசிங்கம் ரவிச்சந்திரன் நாவலடி - மட்டக்களப்பு)

ஒலுமடுப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**சிவா/பாலன்** (வெள்ளையன் இராஜேந்திரன், இராஜேந்திரன்வீதி, நெடுங்கேணி மணலாறு

**லெப். கணேஸ்** (தில்லைநாயகம் டொமினிக்சாந்தன் பனை - கிளிநொச்சி)

நாவற்காடுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**தயா** (செல்லத்துரை விக்னேஸ்வரன் 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

1987ஆம் ஆண்டு, ஆனைக்கோட்டைச் சந்திப் பகுதியில், இந்தியப்படையினர் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சமயம், பதுங்கு குழியினுள் இருந்த போது படுகொலை செய்யப்பட்டு - எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த குழந்தை, 3 பெண்கள், ஒரு ஆண் ஆகிய 5- தமிழர்கள்

1988ஆம் ஆண்டு கைதடிப் பகுதியில் இந்தியப்படையினர், மற்றும் தேசத்துரோகிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**றோகன்** (சின்னப்பர் றோகன் இல. டி 14, தொடர் மாடி, குருநகர் - யாழ்.)

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளரான -

**தம்பிராசா சங்கரன்**

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங்காப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**பூங்குயில்** (சாந்தினி மாரிமுத்து - 710, சுவிற்சென்ரர், வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**கஜலட்சுமி** (கிருபையம்மா பேரின்பம் - கிரான் மட்டக்களப்பு)

**லக்கி** (மனோரஞ்சிததேவிகார்த்திகேசு - சாம்பலோடை காரைநகர் - யாழ்.)

பலாலிப்பகுதியில், சிறிலங்காப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**நாமகள்** (தேவமனோகரி வைரமுத்து - முன்னம் போடிவெட்டை, தோப்பூர் - திருக்கோணமலை)

ஆனையிறவு முகாம் சிறிலங்காப் படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**அறிஞன்** (சாகேஸ்வரன் ஜெயராஜ் -599, பாடசாலை வீதி, செல்வநாயகபுரம், திருக்கோணமலை)

யாழ். வடமராட்சிப் பகுதியில். சிறிலங்கா படையினரின் விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஞானம்** (ராமசாமி சந்திரலிங்கம்- தலவாக்கொல்லை கண்டி)

மாங்குளம் பகுதியில், சிறிலங்காப்படையினரின் முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ஜெகன்** (சுந்தரலிங்கம் சுரேஸ்குமார் -மணலாறு)

இதே பகுதியில், சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மாலி** (துரைராஜா முத்துக்குமார் - ஒலுமடு, நெடுங்கேணி-மணலாறு)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில், சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கணேஸ்** (சித்திரவேலாயுதம் பிரபாகரன்-இருபாலை-யாழ்)

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலைப்பகுதிகளில் சிறிலங்காப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**செழியன்** (சிதம்பரப்பிள்ளை சற்குணராசா - 5/1, ஒட்டுமடம்-யாழ்)

**சரவணன்** [கிருஸ்ணசாமி கணேசலிங்கம்-கால் ஏக்கர், குமரபுரம், பரந்தன்-கிளிநொசசி]

**நெல்சன்** (வீரசிங்கம் இந்திரகுமார் - கிளிநொச்சி)

**கணேஸ்** [நாகசோதி ஜீவநேசம்-புத்தூர்-யாழ்]

**லெப். நெவில்** (நடராசா நாகேஸ்வரன்-போயிட்டி, அச்செழு, நீர்வேலி-யாழ்)

**லெப். தம்பி** [கந்தசாமி தம்பி மயிலிட்டி-யாழ்]

பலாலி முகாம் சிறிலங்காப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வசாவிளான், குட்டிய புலத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5434]

## வடபகுதிக்கு பிரதேச செயலகம் இல்லை

இராணுவக்கட்டுப்பாடு அற்ற வடபகுதியில் பிரதேச செயலகங்கள் எதுவும் திறக்கப்பட மாட்டாது என்று அரசு அறிவித்திருக்கிறது.

இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னரே பிரதேச செயலகங்கள் திறக்கப்படும் என்று கூறப்படுகிறது, (க)

## வீரவணக்கம்

### லெப். கணேஸ்

[டொமினிக சாந்தன்]

தோற்றம்: 05 - 08 - 1964 வீரச்சாவு: 21 - 11 - 1986

### 2ஆம் லெப். தினேஸ்

(அன்ரன் தினேஸ்)

தோற்றம்- 13 - 06 - 1969 வீரச்சாவு: 27 - 11 . 1989

நினைவுகூரும் குடும்பத்தினர்
நண்பர்கள்


(3685)

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

# 21 - 11 - 1992

# 27 - 11 - 1992

நீங்கள் புதைக்கப்பட்டவர்கள்
அல்ல என்பதை
உலக அரங்கில் மெய்ப்பித்தவர்கள்!
தூங்கிக்கிடந்த தமிழர்களின்
உணர்ச்சி நாடிகளை
தூண்டி தமிழீழம் ஒன்றே எங்கள்
விடிவென மீட்டிய நாயகர்கள்!



உங்கள் கனவு, எண்ணம், உறுதி,
திடம் எல்லாமே
சுதந்திரத் தமிழீழம் மலரவேண்டும்
என்பதுதான்
நீங்கள்சிந்திய செந்நீராறு பெருக்கெடுத்து
நீதியுடன் அமைதிகூடிய
தமிழீழமென்னும் அந்தப் புதியபூமி
இவ்வுலகே எழுந்து வரட்டும்!

# வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

## யாழ். கிளை இல: 1

1083, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம். (சி-5425)

### சிந்தனைக்கு

எதிர் காலத்துடன் மிக நெருங்கிய உறவு கொண்ட மனிதனின் நேர்மையான செயலே சரியானது என்று நான் நம்புகிறேன்.

- ஹென்ரிக். இப்ஸென் -

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 21-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# இரப்பானை பிடிச்சதாம் பறப்பிராந்து

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச படையினர் மத்தியில் நிலவும் ஆட்பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய கூடுதலான ஆட்களைத் தரும்படி கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களிடம் சிறிலங்கா இராணுவம் கோரிக்கை விடுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

கடந்த சில மாதங்களாக இராணுவத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை - இறந்த, காயமடைந்த இராணுவத்தினரின் இடைவெளிகள் - நிரப்புவதற்கு பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஊக்குவிக்கும் பொருட்டு, இராணுவத்தில் சேருவதற்கான கல்வித் தகைமையைக் குறைத்துள்ளதோடு, பல சலுகைகளையும் அரசு அறிவித்தும் இருந்தது. ஆனால், இவற்றின் பின்பும் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன் வரவில்லை.

மாறாக, இராணுவத்தில் இருந்து வெளியேறும் தொகையினரே அதிகரித்தவண்ணமுள்ளனர். இராணுவத்தில் இருந்து இதுவரையில் 7000 பேர் வரையில் மட்டுமே வெளியேறியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்ற போதும், உண்மையில் வெளியேறியோர் தொகை இதைவிட பல்லாயிரம் அதிகம் எனவும் சில நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் தான் சிங்கள அரசியல், இராணுவத் தலைமை தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்துள்ளது. இதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் உதவியையும் நாடியுள்ளது. ஆனால், சிங்கள இராணுவத்தின் இக் கோரிக்கையானது ''இரப்பானை பிடிச்சதாம் பறப்பிராந்து'' என்பதற்கு ஒப்பானதொன்றே. தமது குழுக்களில் மிஞ்சியுள்ளவர்களையே பாதுகாக்க முடியாமல் இவர்கள் தவித்துக் கொண்டிருக்கையில் மேலும் ஆட்களை கொண்டு வந்து தா என இராணுவம்

# இனப்பிரச்சினையை தீர்க்க முடியாமல் ஜனாதிபதி தத்தளிக்கிறார்

## -வன்னி மாவட்ட எம் பி. என். அய்யூப்

(கொழும்பு)

இன்றைய ஜனாதிபதி அபிவிருத்திக்கு தடையாக உள்ள பல தடைகளைத் தாண்டியுள்ள போதும் இனப்பிரச்சினை என்ற தடையை தாண்ட முடியாமல் தத்தளிக்கிறார்; தவிக்கிறார். இந்தத் தடையை தாண்டாது விட்டால் நாட்டின் ஒரு பகுதி பிணக்காடாக மாறும் நிலையே உருவாகும் என கடந்த செவ்வாய்க்கிழமை வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய வன்னி மாவட்ட எம்.பி என். அய்யூப் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; இன்று நடைபெறும் யுத்தத்திற்கு ஒரு துரித முடிவு காணுமாறு கேட்டுக்கொண்டதுடன்,

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் பயன்களை அனுபவிக்க தமிழ்ப் பிரதேசங்களுக்கு முடிவதில்லை. இந்த அல்லல் நிலை நீங்க வேண்டுமானால் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும்.

நாம் அகதி முகாம்களுக்கு சென்றால் அங்குள்ள அகதிகள் சீனி வேண்டும் மா வேண்டும் என்று கேட்பதில்லை எப்போது அமைதி திரும்பும் நாம் எபோது சொந்த இடங்களுக்குச் சென்று அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழலாம் என்றே கேட்கிறார்கள் எனவே தயவு செய்து யுத்தத்தை நீடிக்கவிடாமல் அதற்குரிய துரித முடிவு காணுமாறு கேட்டுக் கொண்டார்.

## பாதுகாப்பிற்கு நிதி ஒதுக்குவது அர்த்தமற்றதாகிவிட்டது

### - ஜயரத்தனா

(கொழும்பு)

'பயங்கரவாதம்' வடக்கில் இருந்து கொழும்புக்கு வந்து விட்டது.கடற்படைத் தளபதி கொழும்பில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார் இந்நிலையில் பாதுகாப்புக்கென பெருந்தொகையான பணம் செலவிடுவது அர்த்தமற்றதாகி விட்டது என புத்தள மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்பியான எஸ். டி ஆர் ஜயரத்ன கடந்த திங்களன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கொழும்பில் கொல்லப்பட்டுள்ளார் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட பல அதிகாரிகள் வடக்கில் கொல்லப்பட்டனர். தற்போது மீண்டும் கொழும்பில் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டுள்ளார்.

இந் நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைக்கு என பெருந்தொகையான நிதியைச் செலவிடுவதில் அர்த்தமில்லாமல் போய்விட்டதாக தெரிவித்தார்

## அவசரகால நிலை அரசே தற்போது தேவையாம்

புலிகளுக்குஎதிரான போரில் இன்று அவசரகால நிலை அரசே அவசியம் என பாராளு மன்றில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கேட்டுக்கொண்டார்,

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் பிரிட்டிஷ் மக்கள் செய்ததுபோல இன்றைய போர் சூழலில் இலங்கையிலும் அவசரகால நிலை அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

## ஆந்திர மீனவர்கள் திருமலைக்கடலில் மீட்பு

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள் ஐந்துபேர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு திருக்கோணமலை மீனவர்களால் கரைசேர்க்கப் பட்டுள்ளனர். திருக்கோணமலைக்கு அழைத்து வரப்பட்டுள்ள இவர்கள் தற்போது அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும், இவர்களுடன் சென்ற மீனவர்களில் ஒருவர் கடலில் உயிரிழந்ததாகவும் கூறப்படுகின்றது.

## கூட்டுறவாளர் நடாத்தும் மாவீரர் தின விழா

தீவக கூட்டுறவாளர்கள் நடாத்தும் 'மாவீரர் தின விழா' 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இரண்டு மணிமுதல் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் ஆகியோரின் சிறப்புரைகளுடன் தீவக கூட்டுறவாளர்கள் வழங்கும் 'போர்க்கால ராகங்கள்' இன்னிசை நிகழ்ச்சி உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இவ் விழாவில் இடம் பெறும்

(22)

# யுத்தம் நீடிக்கத்தான் போகிறது அரசு நம்பகத்தன்மை இழந்துவிட்டது

## சி. வி. குணரத்ன

(கொழும்பு)

கடற்புலிகளை பலவீனப்படுத்த திட்டம் தீட்டியவர் கொழும்பில் கொல்லப்பட்டுள்ளார். வடக்கு - கிழக்கு யுத்தம் முடிந்துவிடும் என்றார்கள் ஆனால் யுத்தம் முடிகிற யில் கொழும்பைப் பாதுகாக்க சகல நடவடிக்கையும் எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது ஆனால் கடற்படைத் தளபதி உயிரிழந்து விட்டார் அரசின் நம்பகத்தன்மை எங்கே என்று கேள்வி எழுப்பினார் எம். பி. குணரத்ன.

விடுதலைப்புலிகள் குறித்த

# பி.பி.ஸி. செய்திக்கு இந்திய எம்.பிக்கள் கண்டனம்

(டில்லி)

புதன்கிழமையன்று பி.பி.ஸியின் ஆசியத் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது விடுதலைப்புலிகள் பற்றி ஒளிபரப்பப்பட்ட காட்சிக்கு இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்தக் காட்சிகள் உண்மைக்குப் புறம்பானதும் திரித்துக் கூறப்பட்டதும் ஆகும் என்று முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம், மணிசங்கர் ஐயர், தங்கபாலு, வி. அனுமந்தராவ், புவனேஷ்வர காலிதா, சுரேஷ்பட்டோடி, பவன்குமார்பஜ்ஜல் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்

### மாவீரர்கள்

வாழ்வு, இடம்பெயர்ந்த அகதி வாழ்வு. தடைப்பட்ட பொருளாதாரத்தால் மக்களின் வாழ்க்கை நலிவு, இவையாவையும் கண்டு மனம் தளராது மார்க்கம் கண்டு, பொருளாதாரத்தில், விவசாயத்தில், தொழில்கள் வளர்ச்சியில் எம் காலில் நாம் நின்று எதிரியிடம் கையேந்தாமல் நாம் வாழுகின்ற. இனி வாழவேண்டிய வழிவகைகளைத் திட்டமிட்டு இன்றைய நிலையில் வழிவகுத்து, வளர வழிகாட்டி விட்டுச் சென்றவர்களும் இம் மாவீரர்கள் தான்.

எதிரியிடம் போரிட்டு, மீட்கின்ற மண்வெற்று மண்ணாகவன்றி, மக்கள் வாழ்வு, வளம், கல்வி, நீதி நிர்வாகம், சுகாதாரம் யாவும் சீர்கெட்டுப்போகாமல், சிதைந்தழிந்து போகாமல் போராடிப் போராடி இவற்றையும் வளர்த்துவிடவேண்டும் என்ற தலைமைத் துவத்தின் திட்டங்களைக் கூடவழுவாது நிறைவேற்றி நிறைவு பெறப்பாடுபட்டு, வழிகாட்டிச் சென்றவர்கள் இம்மாவீரர்கள்.

மாவீரர்களின் மகத்தான நாள் ஆண்டுதோறும் வரும் நவம்பர் மாதம் 27 ஆம் நாள் இந்நாளில் தான் எமதுபோராட்ட முதல் மாவீரன் லெப்டினன்ட் சங்கர் என்கின்ற சத்தியநாதன் இம்மண்ணுக்காய்த் தன்னை அர்ப்பணித்தான். இந்நாள் ஈழத்தமிழரின் தேசிய நாள். எமது தலைமைத்துவத்தை உறுதியுடன் ஏற்றுக்கொண்டு, எமது தேசியக் கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தி மாவீரருக்கு ஒன்று சேர்ந்து வீரவணக்கம் செலுத்தி மாவீரர் பெற்றோரைக் கௌரவிப்பது இந்நாளில் தமிழீழ மக்களின் தலையாய கடனும், கடமையுமாகும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

### அகதிகளுக்கான

சிறிலங்காப்படையினரின் உணவுத் தேவைக்காக காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் மாதக்கணக்காகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த மேற்படி உணவுப் பொருள்கள் பழுதடைந்து விட்டன இக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டி

### மாவீரர்

கத் தம் உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களின் உருவப் படங்கள் வட்டரீதியாக வைக்கப்பட்டுள்ளன.இவற்றுக்கென வட்டங்கள் தோறும் மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வலிகாமத்தில் ஆறு பந்தல்களும், தென்மராட்சியில் நான்கு பந்தல்களும், வடமராட்சியில் இரண்டு பந்தல்களும் தீவக மக்கள் சார்பில் ஏழு பந்தல்களும் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர யாழ். மாவட்டம் முழுவதும் கடற்புலிகளால் ஐந்து பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வட்டங்கள் ரீதியாகவும் அமைக்கப்பட்டுவரும் இப்பந்தல்களில் அந்தந்தப் பகுதி மாவீரர்களின் உருவப் படங்கள்வைக்கப் பட்டுள்ளன.

### கோட்டையிலே:

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்த யாழ். கோட்டையை மீட்டெடுத்து வரலாறு படைத்த போரிலே வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்கள் பொது மக்களின் வணக்கத்துக்காகக் கோட்டை பிரதான வாயிலிலே அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் வைக்கப்பட்டுள்ளன. மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளஇப்பந்தல் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

### ஜனாதிபதி

பட்ட சாஜன்ட்பிரேமசந்திரா இதனால் படுகாயம் அடைந்ததாகவும், இதைத் தொடர்ந்து துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் கையிலிருந்த ''பாக்கையும்!' கைவிட்டு வீதியில் வந்த கார் ஒன்றைக் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கைவிடப்பட்ட பாக்கில் இருந்து. இரு கைக்குண்டுகளும் ஒரு ஏ கே. மகசீனும் கைப்பற்றப் பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பின்னர் இவர்கள் சென்ற கார் இருலப்பனை மாவத்தை வீதிக்கு அருகே அனாதரவாக விடப்பட்டிருந்ததைப் பொலிஸார்

இவர்கள் தவித்துக் கொண்டிருக்கையில் மேலும் ஆட்களை கொண்டு வந்து தா என இராணுவம் நிலைமை புரியாமல் வற்புறுத்துகிறது அவர்கள் எங்கே போவார்கள்பாவம்? அவர்களின் இந் நிலையை இராணுவம் புரிந்து கொள்ளாது வற்புறுத்துவது அவ்வளவு அழகல்ல.

இதேவேளை, சிங்கள இராணுவத்தின் வற்புறுத்தல் தமிழ்க் குழுக்களில் எஞ்சியுள்ளோர் மத்தியில் பெரும் அச்சத்தையும், அவலத்தையும் தோற்றுவித்துவிடக் கூடியதுஇராணுவத்தின் பாதுகாப்பில் குளிர் காயலாம் என எண்ணியிருந்தவர்களுக்கு இராணுவம் நீ முன்னே போ, நான் பின்னால் வருகிறேன் என உத்தரவிடும் நிலைக்கு வந்துள்ளமை இக்குழுக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததே.

ஆனால், தொடர்ந்தும் இராணுவம் வற்புறுத்துமானால், இராணுவக் கட்டுபபாட்டிலுள்ள பிரதேசங்களில் இருந்து இளைஞர்களைப் பிடிப்பதை விடுத்து அவர்களுக்கு வேறுவழியில்லை. இந்திய இராணுவம் தமிழ்ப் பகுதியில் நிலைகொண்டிருந்த போதும் இவ்வாறே இவர்கள் 'ஆட்கள்' பிடித்தார்கள். இதனால் இதற்கான அனுபவம் இவர்களிடம் உண்டு.

இதேவேளை இராணுவத்திற்கு 'ஆட்பிடித்தல்' முயற்சியில் தமிழ்க் குழுக்கள் ஈடுபடுமானால் இதனை சிறிலங்கா அரசாங்கமும் இராணுவத் தரப்பும், ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருப்பது போலும், அதற்குத் தயாராகி வருவது போன்றும் தெரிகின்றது. முன்னர் பிடிக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்திற்குப் பொறுப்பாக இருந்த காளி எனப்படும் காளிதாசனை சிறிலங்கா இராணுவம் தம்முடன் சேர்த்துக்கொண்டிருப்பதும் இந்தியாவிலுள்ள முன்னாள் தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்களை சேர்த்துக்கொள்ளமுற்பட்டுள்ளமையும் இதனையே வெளிப்படுத்துமாப் போல் உள்ளது.

இந்நிலையில் தமிழ் இளைஞர்கள் மிகவும் விழிப்பாக இருத்தல் நல்லது. தோல்வியின் விளிம்பில் உள்ள சிங்கள இராணுவம் தமிழினத்தின் கோடரிக் காம்புகளின் துணைகளுடன் மீண்டும் ஒரு 'ஆள் பிடித்தலை' நடத்தலாம். இதுவும் கடந்த காலத்தைப் போன்றே தமிழினத்திற்கும் கெடுதலாய் அமையலாம்,

தம் முடிந்துவிடும் என்றார்கள் ஆனால் யுத்தம் முடிகிற மாதிரித் தெரியவில்லை இவ் யுத்தம் மேலும் ஆறு மாதத்துக்கு மேல் நீடிக்கத் தான் போகிறது என சி. வி. குணரத்ன எம். பி. கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

மேலும் அவர் தெரிவிக்கை

டது ஆனால் கடற்படைத்

பினார் எம். பி. குணரத்னா.

## வாழை அழிவுக்கு நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழைத் தோட்டங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான கொடுப்பனவுகள் மிக விரைவில் விநியோகிக்கப்படவிருக்கிறது.

## நிவாரணம் தாமதம்

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் (நவம்பர்மாதத்திற்குரிய) உலர் உணவு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் இடம் பெயர்ந்து, வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கால தாமதத்திற்குயாழ். செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதியின் செயற்பாடே காரணம் என அறிய வருகின்றது. இவ்வாறு தொடர்ந்து காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் செயலக புனர்வாழ்வுப் பகுதி புனரமைக்கப்படுதல் வேண்டும் என, அரச அதிபரைக் கோருவது என தீவக மக்களின் நலன்காக்கும் கழகம் தீர்மானித்துள்ளது.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி, மக்கள் வங்கிகளில் நியமிக்கப்படவிருக்கும் 22 எழுதுவினைஞர்களுக்குமான நேர்முகப் பரீட்சை மிக விரைவில் கொழும்பில் நடைபெற உள்ளது. (க)

## பாராளு. தெரிவுக்குழுவிற்கு மேலும் இரு அங்கத்தவர்

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அரசியல் கட்சிகளில் இருந்து மேலும் இருவர் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதாகவும் இது தொடர்பாக குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது

சேர்த்துக்கொள்ளப்பட இருக்கும் இவர்கள் பார்வையாளராக இருந்து கொண்டு சம்பந்தப்பட்ட கட்சியின் பிரதி நிதிகளுக்கு ஆலோசனை வழங்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## குமாரி கப்பல் சேவை தொடர்வதற்கு நிபந்தனை

(யாழ்ப்பாணம்)

குமாரிக்கப்பல் சேவையைத் தொடர்ந்துநடாத்துவதற்குத் தொடர்ந்தும் அரசு நிபந்தனை விதித்திருக்கிறது.

கப்பலில் எடுத்து வரம்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு முற்பணப் செலுத்த வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

இதனால் யாழ். மாவட்டத்தில்உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இக்கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வரவிரும்பினால், உடனடியாக அரச அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது தமது விற்பனைக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன இதனால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, முற்பணத்தை அரச அதிபருடாகச் செலுத்தி தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்யலாம் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. (க)

## கொழும்பு கப்பல் சேவை 1400 ரூபா கட்டணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையின் போது ஒரேதடவையில் 600 பயணிகள் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

குளிரூட்டப்பட்ட பகுதிகளையும கொண்டிருக்கும் இக் கப்பல் சுமார் ஏழு மணிநேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றடையும் என்று கூறப்படுகிறது. இப் பயணிகள் கப்பலுக்கான கட்டணம் ஒரு வழிப்பாதைக்கு ஒரு பயணிக்கு 1,400 ரூபா என்றும் கூறப்படுகிறது. (க)

## பென்சன வவுச்சர்

அடுத்தவாரம் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படும் "குமண" என்ற கப்பலில் நவம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் எடுத்துவரப்படவிருக்கிறது

பழுதடைந்து விட்டன இக்களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் இப் பொருள்கள் பழுதடைவதைத் தடுக்கும் முகமாக இருதடவைகள் இப் பொருள்களுக்கு புகையூட்டப்பட்டதாக அக்களஞ்சியத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

புகையூட்டியும் இப்பொருள்கள் பழுதடைவதைத் தடுக்க முடியவில்லை இப்பொழுது இப்பொருள்கள் படையினரது பாவனைக்கு உகந்தவை அல்ல எனக் கருதப்பட்டமையாலும் களஞ்சியத்தில் இருந்து இப் பொருள்களை அகற்றுவதற்காகவும் மேற்படி முயற்சி துரித கதியில் நடைபெற்று வருகிறது.

## கொழும்பு

ரில் கேந்திர முக்கியத்துவம் வாய்த்த இடங்களில் சோதனைத் தடைகள் அமைக்கப்பட்டன முக்கிய விதிகளில்ஆயுதந்தாங்கிய பொலிசாரும் இராணுவத்தினரும் காவலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். பொலிஸ்-இராணுவ ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நுழைவாயில் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு நகரத்தை விட்டு வெளியேறும் வாகனங்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டிருந்ததைப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்,

இதே வேளை, இக்கொலை முயற்சி ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாசா மீதா அன்றி வர்த்தக வாணிப துறை அமைச்சர் முகமட் மீதா மேற்கொள்ளப்படவிருந்தது என்பது குறித்து சந்தேகம் நிலவுவதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங் தெரிகின்றன.

## நீதி மன்றம்மீது குண்டுவீச்சு

அடுத்த சம்பவம் கொழும்பு நீதி மன்ற வளவில் நேற்றுக் காலை நடந்த குண்டு வீச்சு சம்பவமாகும் இதில் ஒரு சட்டத் தரணியும்இரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தரும் படுகாயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீதி மன்ற வளவில் மேல் மாடியில் நபர் ஒருவரை விசாரணை செய்ய முற்பட்ட வேளையில் இக் கைக் குண்டு வீச்சு சம்பவம் நடைபெற்றதாகவும் இந்நபர் பாரிய குற்றச் செயல் காரணமாக கைது செய்யப்பட்டவர் என்றும் தெரியவருகிறது.

இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

## மாவீரர்களே!

எத்தனை துயரதை இம்மண் சுமக்கும்
- தமிழ்
ஈழம் நெருப்பெனப் பொங்கிச் சிவக்கும்
வித்தான மாவீரர் தாகம் தணியும்
- வெறிச்
சிங்களம் நாளை யெம் காலில் பணியும்

(மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள், பதாதை வசனங்கள்)

ஈழநாதம்

ஆயித்திய மலையில் பலர்கடத்தல்

# பாதுகாப்பு வழங்குமாறு தமிழ்மக்கள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

ஆயித்தியமலை கிராமப் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் தங்கள் உயிருக்கு போதிய பாதுகாப்பு ஏற்படுத்தித் தருமாறு கோரி மட்டக்களப்பு சமாதானக் குழுவினருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆயித்தியமலை வடக்கு, ஆயித்தியமலை தெற்கு, நெல்லிக்காடு பகுதியைசேர்ந்தமக்கள் கையெழுத்திட்டு மகஜர் அனுப்பியுள்ளனர்.

அண்மையில் மேற்படி கிராமம் ஒன்றிற்குள் புகுந்த குழுவினர் வீடுகளின் கதவினை உடைத்துக் கொண்டு உட்புகுந்து சென்று மூன்று பெண்களையும் இரு ஆண்களையும் அழைத்துச் சென்றனர் இவர்களில் ஒரு பெண் ஆயித்தியமலை இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிது.

இத்தகைய பயங்கரத்தை எத்தனை காலத்திற்கு சமாளித்துக்கொண்டு எங்களால் வாழமுடியும் கடந்த இருபது நாட்களாக இத்தகு பயங்கர சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. இதிலிருந்து மக்கள் தம்மை பாதுகாக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்படுத்தி. தரவேண்டும் என அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## மறுமலர்ச்சிக் கழக மாவீரர் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற உள்ளது.

மேற்படி நிகழ்வில் மாவீரர் பற்றிய உரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

## கோட்டரீதியாக இன்று மாவீரர் வார கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் வாரத்தில் வட்டரீதியாக பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இன்று வலிகாமக் கோட்டத்தின் நல்லூர் வட்டத்தில் இரவு 7.30 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையிலும் தென்மராட்சி கோட்டத்தில் இரவு 7.00 மணிக்கு சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. கோபால் தலைமையில் நுணாவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் பளைவட்ட பெறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் புலோப்பளை கல்வி வளர்ச்சிக் கழகத்திலும் தீவக கோட்டத்திற்கான கூட்டம் கெற்பலி பண்டிதர் குடியிருப்பிலும் வலி - கிழக்குவட்ட கடற்புலிகளின் கூட்டம் அராலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

## கடற்படை

டம் கடந்த சில வாரங்களாக இரவு பகலாக அதிகரித்துள்ளது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் ரோந்தில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (யோ)

## ‘புலிகளின் குரல்’ 2ஆம் ஆண்டு நிறைவு

‘‘புலிகளின் குரல்’’ வானொலி இன்றுடன் தனது இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்கிறது. 1990ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 21ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர்தின செய்தியுடன் இவ்வானொலிச் சேவை ஆரம்பமாகியது.

இதேவேளை இன்றுகாலை 8.30மணி தொடக்கம் 9.30 மணிவரை ‘‘புலிகளின் குரல்’’ விசேடசேவை ஒன்றை நடாத்துகிறது. இச் சேவையில் 9 00 மணிக்கு தமிழீழ தேசிய கொடியேற்றப் பாடல் ஒலிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின்

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் வர்த்தகம் செய்யும் சகல வர்த்தக உரிமையாளர்களும், வர்த்தகர்களின் நன்மை கருதி முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால் அந்தந்த பிரிவு வர்த்தக சங்கங்களில் கண்டிப்பாக அங்கத்தவராக பதிவு செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

என். கே. குலசிங்கம் (உப-தலைவர்) (3672) ஜெ. சந்திரகாந்தன் (செயலாளர்)

## இலங்கேஸ் படிப்பகம் திறப்புவிழா

(சாவகச்சேரி)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு மீசாலை மேற்குப் பகுதியில் 2-ம் லெப். இலங்கேஸ் ஞாபகார்த்தப் படிப்பகம் இன்று [சனிக்கிழமை] காலை 9 00 மணிக்கு தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. [35]

## பெண்ணிடம் சங்கிலி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் டேவிற் வீதியில் நேற்று இரவு 8.00 மணியளவில் மேற்படி வீதியால் சென்று கொண்டிருந்த பெண்மணியிடமிருந்து தங்கச்சங்கிலி ஒன்று திருடர்களால் திருடப்பட்டிருக்கிறது.

இத் திருட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

## பெற்றுக்கொள்ளவும்

கச்சாய் அரசினர் அ.த.க. பாடசாலைக்கருகாமையில் ஒரு தங்கச் சங்கிலி கண்டெடுக்கப்பட்டு பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## உணவு நிலைமை ஆராய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட உணவு நிலைமையை இட்டு ஆராய்வதற்கான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுடனான கூட்டம் இன்று மாலை 2.00 மணியளவில் யாழ்ப்பாணம் செயலக மண்டபத்தில் நடைபெறஉள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

# கடற்படைத் தளபதியாக சமரசேகரா நியமனம்

### றியர் அட்மிரலாக பதவி உயர்வு

(கொழும்பு)

கொமடோர் ஏ. எம். ஆர். சமரசேகரா றியர் அட்மிரல் அந்தஸ்து வழங்கப்பட்டு கடந்த திங்கட்கிழமையிலிருந்து கடற்படைத் தளபதியாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடற்படையின் 12வது தளபதியாவார் 44 வயதானவத்தளை பெனான்சியல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இலங்கைப் பல்கலைக்கழக பட்டதாரியாவார்.

சமரசேகரா 1971 ஆம் ஆண்டு அரச கடற்படையில் நேரடியாகவே உப லெப்ரினன் பதவியினை பெற்றுக்கொண்ட இவர் அமெரிக்கா, இந்தியா கடற்படை கல்லூரிகளில் பயின்றவர் சிறிதுகாலம்கிழக்கு பிராந்திய கடற்படை தளபதியாக கடைமையாற்றியவர். 1990 ஆம் ஆண்டு கொமடோர் பதவியினை பெற்றுக் கொண்டவர்.

இவர் சிறிலங்காவின் ஆயுதப் படைகள் பதக்கத்தையும், ஜனாதிபதி பதக்கம், பூர்ண பூமிப் பதக்கம், வடமராட்சி தாக்குதல் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டவர்.

## அப்புத்தளை பகுதியில் நிலம் அமிழ்கிறது

(அப்புத்துளை)

அப்புத்தளை தோட்டம் கல்கந்தை டிவிஷனில் ஒரு பகுதி நிலம் கீழ்நோக்கி அமிழ்ந்து கொண்டே செல்வதால் பாரிய அனர்த்தம் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

நிலம் கீழிறங்கிக்கொண்டே செல்வதால் 49 குடும்பங்களைச் சேர்ந்த 206 பேர் வரை நேற்று முன்தினம்வரை பாதுகாப்புக்காக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து இப்பகுதி திடீரென நிலத்தினுள் புதைந்து விடுமோ என்ற அச்சம் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அப்புத்தளை சருட்டி தோட்டத்திலும் நிலத்திலும் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது இதனால் இத்தோட்டத்தில் உள்ள தொழிலாளர்களும் மண்சரிவு ஏற்படலாம் என்ற அச்சத்துடன் வாழ்கின்றனர்.

## விசகடி

ரன் [வயது 27] ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலியான இருவரது சடலங்களும் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச. க)

## காயமடைந்த மீனவர் மரணம்

(குருநகர்)

சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு கடந்த 11-ம் திகதி இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த மீனவரான செல்வம் சுரேஸ் (வயது 22) நேற்று அதிகாலை மரணமானார்.

சிறுத்தீவுக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தலையில் படுகாயமடைந்த அவர் கடந்த ஒன்பது தினங்களாக அறிவு திரும்பாத நிலையில் இருந்து வந்தார். (21)

## மாவீரர் உருவப்படம்

இளங்கோ (சின்னத்துரை ரவீந்திரன்), வீரவேங்கை அசோக் (சீவரட்ணம் மேன்சொலமன் இலங்கை ராசன்) வீரவேங்கை சீலன் (செல்லையா பாலகுமாரன்), லெப். சஞ்சீவி மீசச (செல்லப்பா கெங்காதரன்), லெப். ராஜா (இராமலிங்கம் பரமதேவா, வீரவேங்கைசிவம்) சிவசம்பு- சிவராசா, வீரவேங்கை தேவன் (விஸ்னு தேவநாதன்) வீரவேங்கைஸ்வரன் (சந்திரா யோகீஸ்வரன்) லெப். பழசு வின்சன் (முதுங்கொடுவ உடுகமகேஹமசிறி), 2ஆம் லெப். ஜீவன் (தம்பிஐயா இரத்தினசாமி) வீரவேங்கை நெல்சன் (சின்னத்துரை, உதயகுமார்), லெப். செல்லக்கிளி அம்மான் சதாசிவம் செல்வநாயகம்) ஆகியோரது உருவப்படங்களை சிறு அன்பளிப்புச் செலு

UNIVERSITY OF JAFFNA

TENDER NOTICE

Tenders are invited from Contractors registered for Civil Engineer'ng works with University of Jaffna or ICTAD for

‘‘Improvements to Vithianathan Library’’

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 24-11-92 — 27-11-92 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the follow ng tender fee

a) Refundable Rs 3000/-

b) Non - Refundable Rs. 250/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10.00 a.m on 1992-12-10.

Tender forms canbe inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reje.t any tender.

Registrar
University of Jaffna,
P. O. Box 57,
Jaffna.

(சி-5436)




‘‘மாவீரர் வார சிந்தனை’’

NURSERY SCHOOL

# NURSERY SCHOOL

## (கல்வி ஆண்டு-1993)




1988 பெப்ரவரி 01ஆம் தேதிக்கும் 1990 ஜனவரி 31 ஆம் தேதிக்கும் இடையில் பிறந்த சிறுவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்

மேலும் சிறிதளவு இடவசதி மட்டுமே இருப்பதால் உங்கள் அனுமதிகளை உடனே பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பாலர்பாடசாலையில் கற்பிக்க பயிற்சி பெற்றவரும், அனுபவம் வாய்ந்தவருமான ஆசிரியர் ஒருவர் மேலும் தேவைப்படுவதால் விரும்புவோர் இம்மாதம் 23ம்,25ம் திகதிகளில் பி.ப.4-00 மணிக்கு சகல சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.

“சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரத்தை அள்ளி அணைதது அரிய கல்வி ஊட்டிவைப்போம்”

ESTD:-1973 REGD.-№ J/7993

**The Express Institute**

IRUPALAI-KOPAY

(இ/5428)

**மண்மீட்கப் போராடும் நாங்கள்**
**மண்காக்கும் மரங்களை காப்போம்**

---

உதயகுமார்), லெப்.செல்லக்கிளி அம்மான் சதாசிவம் செல்வநாயகம்) ஆகியோரது உருவப்படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்தி மாவீரர் பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு

11 — 10 — 1968



வீரச் சாவு

21 — 11 — 1990

### லெப்டினன்ட்-நெவில்

(நடராசா - நாகேஸ்வரன்)

மாவிட்டபுரம் தச்சன் காட்டுச் சந்தியில் நடந்த நேரடி மோதலில்வீரச்சாவு அடைந்தார்

அச்செழுவில் உதித்த அருமைப் புதல்வா
நெவில் நீ... அன்று இனவிடுதலை
உன்னைக் கவர்ந்தது. போராட வேண்டுமென்று
போர்முனை சென்றாய் காங்கேசன்துறையினிலே
களம்பல கண்டாய் கோட்டையில் நின்று
கொடியவரைப் பலியெடுத்துக் கொடியும் நாட்டிவித்தாய்

இது மட்டுமா... தச்சன் காட்டுக்குத்
தனைமறந்து சென்றாய் மினி முகாம் எதிரிகளை
மிரட்டியடித்துவிட நேருக்கு நேர் நின்று
நெவில் நீ எதிரிகளை அடித்துக் கலைக்கவென்று
அவரமாய்ப் புகுந்தாய் அக்கணத்தினிலே
மரணம் உன்னை வாவென்று அழைத்ததுவோ?
மாவீரர் தினத்தினிலே மரணம் உனைக் கவர்ந்ததோ
மாண்ட வீரனே மாவீரர் நாளினிலே
மறவாமல் உன்னை நினைவு கூரு ன்றோம்

உன் பிரிவை நினைத்து வாடும்
ஐயா, அம்மா, அண்ணா,
அண்ணி, தம்பிமார், தங்கை,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

(சி-5420)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---



சிந்தனை”

“இந்த மண்ணை நான்முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.”

‘தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்’
(சி-5438)

---

## மரண அறிவித்தல்

### செல்லையா நடராஜா
### (துரை)

(சீமெந்துக் கூட்டுத்தாபன கற்குளிப்பகுதி பாரவாகன இயக்குனர்)

குமாரகோவில் வீதி, காங்கேசன்துறையில் வசித்து வந்த செல்லையா நடராஜா (துரை) 20-11-92 இல் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயா, தயா, ஜீவா, சுபாகரன், கிருபாகரன், சத்தியபாமா, சத்தியதேவி, பிரபாகரன், ஜெகதீஸ்வரி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் கல்லாரை, மல்லாகத்தில் 26-11-92 இரண்டு மணியளவில் நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜீவா (மகன்)

கல்லாரை,
மல்லாகம்.

(3677)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 20-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6782

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
22-8690, 28-7261, 24-9676, 24-8391, 26-5281, 27-6769
41-5949

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்
24-7740, 27-1531, 42-0728, 28-0882, 26-7068, 26-3118
24-5679, 26-3741, 41-6544, 26-0923, 24-9856